**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2023ம் வருடம் டிசம்பர் மாதம் 13ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.13/2023**
**In**
**OS 115/2019**

1. மாரியம்மாள் (எ) ராஜாத்தி
2. முத்துராஜா
3. ராஜசேகரன்
4. ஆனந்தன்
5. கருணாநிதி ..மனுதார்கள்/1, 3, 5, 6, 9 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சரோஜா
(மேற்படியாரின் பவர் ஏஜெண்டும் அடுத்து ஸ்நேகிதருமான முத்து மூலமாக) ...1ம் எதிர்மனுதார்/வாதி

/எதிர்/

2. நாகலெட்சுமி
3. முருகன்
4. சேகர்
5. சௌந்தரம் ..2 முதல் 5 வரை எதிர்மனுதார்கள்/2, 4, 7, 8 வரை பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 06.12.2023ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதார்கள்/1, 3, 5, 6, 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. T. முத்துராமலிங்கம், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதார்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. P. ஆதிமூலம், பி.ஏ.,பி.எல் அவர்கள் ம்னனிலையாகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்டும், சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (13.12.2023) இந்நீதிமன்றம் வழங்கலான:-

## உத்திரவு

இம்மனுவானது, வா.சா.1 ஆன முத்து மனைவி சரோஜா என்பவரிடமிருந்து சமூகம் நீதிமன்ற சிரஸ்த்தார் முன்னிலையில் மாதிரி கைரேகைகள் பெற்றும் அவற்றுடன் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களில் உள்ள சரோஜாவின் கைரேகைகளையும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 29.07.2013 ம் தேதிய பொது அதிகார ஆவணத்தில் உள்ள சரோஜாவின் கைரேகையையும் நீதிமன்றத்திலிருந்து பெற்று கைரேகை தடயவியல் துறை நிபுணரின் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏதுவாக வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையாளராக நியமனம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26, விதி 10(a) மற்றும் பிரிவு 151-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதார்கள்/1, 3, 5, 6, 9 பிரதிவாதிகள் தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதார்கள் தங்களது மனுவில் தாவா வழக்கானது மாண்பமை சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மு.வ.எண்.98/2013 என்ற எண்ணில் நடைபெற்று புதிய நீதிமன்ற ஆள்வரை அதிகார வரம்பின்படி சமூகம் நீதிமன்றத்திற்கு மாறுதலாகி மு.வ.எண்.115/2019 என்று எண்ணிடப்பட்டு நடைபெற்று வருகிறது என்றும், தாவா வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், மனுதார்கள் தரப்பில் வா.சா.1 ஆன முத்து என்பவரை கடந்த 10.07.2018-ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்த போது 29.07.2013 ம் தேதிய பொது அதிகார ஆவணத்தில் கைரேகை செய்துள்ள மேற்படி முத்துவின் மனைவியான சரோஜா என்பவரின் கைரேகை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், ஆனால் பி.வா.சா.ஆ.1 ஆன 26.07.2000-ம் தேதியிட்ட திருப்புவனம் சார்பதிவகம் ஆவண எண்.1141/2000 என்ற பாகப்பத்திரத்தில் பதிவு செய்துள்ள சரோஜா என்பவரின் கைரேகை இல்லை என்றும், அதேபோல் பி.வா.சா.ஆ.2 ஆன 5ம் பிரதிவாதி ராஜசேகரன் என்பவரால் முத்து ராஜா என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ள திருப்புவனம் சார்பதிவகம் ஆவண எண்.1011/2000 என்ற எண்ணில் 13.06.2000-ம்

தேதியில் பதிவு செய்துள்ள கிரையப்பத்திரத்தில் கண்ட மனுதாரர் கருணாநிதி மனைவி சரோஜாவின் கைரேகை இல்லை என்றும் பதில் அளித்துள்ளார் என்றும், மேலும் கைரேகையை ஒப்பீடு செய்வதற்கு மனுதாருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், எனவே ச மூகம் நீதிமன்றத்திற்கு பொன்னுச்சாமி சேர்வை மகளும், முத்து மனைவியுமான சரோஜா என்பவரை நேரில் வரவழைத்து சமூகம் நீதிமன்ற சிரஸ்த்தார் முன்னிலையில் ஆஜராகி வெற்றுப் பேப்பரில் கைரேகையை பெற்றுக்கொண்டு, 29.07.2013ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் 16.07.2000-ம் தேதியிட்ட பாகப்பத்திரம் 12.06.2000-ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் ஆகியவைகளில் பதிவு செய்துள்ள சரோஜா என்பவரின் கைரேகைகளையும் கைரேகை தடவியல் துறையின் நிபுணரின் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற வேண்டியதும் அவசியமாக உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்கண்ட ஆவணங்களை தடவியல் துறை ஆய்விற்கு உட்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், இந்த நிலையில், மனுதார்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி பிராதில் கோரியுள்ள பாகப்பிரிவினைக்கான பரிகாரமும் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியதில்லை என்றும், ஏற்கனவே 26.07.2000 ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு தெரிந்த நிலையிலேயே பாகம் ஏற்பட்டுவிட்டது என எதிர்வாதம் செய்துள்ளோம் என்றும், மேலும் தாவா வழக்கின் தன்மையைப் பொறுத்து மனுதாரர் தரப்பு எதிர்வாதத்தை சமூகம நீதிமன்றத்தில் நிரூபிக்க மேற்படி ஆய்வு அறிக்கையும் மிக முக்கியமானதாகும் என்று மனுதார்கள் தரப்பு வழக்கறிஞர் மூலமாக சட்ட அறிவுரையும் கிடைத்துள்ளது என்றும், எனவே சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து, வா.சா.1 ஆன முத்து என்பவர் மனைவி சரோஜா என்பவரிடமிருந்து சமூகம் நீதிமன்ற சிரஸ்த்தார் முன்னிலையில் மாதிரி கைரேகைகள் பெற்றும் அவற்றுடன் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களையும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 29.07.2013-ம் தேதி பொது அதிகார ஆவணத்தையும் நீதிமன்றத்திலிருந்து பெற்று கைரேகை தடவியல் துறை நிபுணரின் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி தாக்கல் செய்ய ஏதுவாக அனுமதி அளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், நீதிமன்ற ஆணையருக்குரிய ஊதியத்தையும் தடவியல் நிபுணரின் அறிக்கைக்கு ஏற்படக்கூடிய செலவினங்களையும் செலுத்தி

வைக்க தயாராக உள்ளார் என்றும், தாவா மனுவை தாக்கல் செய்து கொள்வதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடியதில்லை என்றும், ஆகவே சமூகம் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து, வா.சா.1 ஆன முத்து என்பவர் மனைவி சரோஜா என்பவரிடமிருந்து சமூகம் நீதிமன்ற சிரஸ்த்தார் முன்னிலையில் மாதிரி கைரேகைகள் பெற்றும் அவற்றுடன் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களில் உள்ள சரோஜாவின் கைரேகைகளையும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 29.07.2013 ம் தேதிய பொது அதிகார ஆவணத்தில் உள்ள சரோஜாவின் கைரேகையையும் நீதிமன்றத்திலிருந்து பெற்று கைரேகை தடவியல் துறை நிபுணரின் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற்று சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏதுவாக அனுமதி அளித்திட உத்தரவாக வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதார்/வாதி தரப்பிலான எதிர்உரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் தனது எதிர்உரையில் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு நிலுவையில் இருந்த பொழுதே வாதி தரப்பு சாட்சிகளின் விசாரணை முழுவதுமாக கடந்த 09.10.2018ம் தேதியிலேயே முடிந்த பின்னர் மானாமதுரை நீதிமன்றத்திற்கு வழக்கு மாறுதலாகி கடந்த 5 வருடங்களாக நிலுவையில் உள்ளது என்றும், கடந்த 5 வருடங்களாக பிரதிவாதிகள் தரப்பில் அனைத்து சாட்சிகளும் விசாரித்து குறுக்கு விசாரணையும் செய்த பொழுதெல்லாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டு தற்பொழுது காலம் கடந்து பின்யோசனையாக எதிர்மனுதாரர் மனைவியின் கைரேகையை நிபுணரின் ஆய்விற்கு அனுப்பிட வேண்டும் என்று மனுசெய்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் 10.07.2018ம் தேதியிலேயே குறுக்கு விசாரணை செய்த பொழுதே 26.07.2000 தேதியிட்ட பாகபத்திரம் மற்றும் 03.06.2000 தேதியிட்ட கிரய ஆவணம் ஆகியவற்றில் உள்ள கைரேகை தனது மனைவியுடையது அல்ல என்று மறுத்துள்ளார் என்று பதில் அளித்துள்ளார் என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் ஏன் மனுத்தார்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை சுமார் 5 வருடங்கள் கழித்து இரு தரப்பு சாட்சி விசாரணைகள் முடிவுற்று வாதுரைக்காக வாய்தா ஏற்பட உள்ள நிலையில் மனுதார்கள் இம்மனுவினை தாக்கல் செய்திருப்பதிருந்தே வாதிக்கு வழக்கில் எவ்விதமான பரிகாரங்களும் கிடைக்காமல் காலதாமதம் செய்ய

வேண்டும் என்ற மனுதார்களின் கெட்ட உள்நோக்கம் சமூகம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றும், மேலும், மனுதார்கள் ஆய்விற்கு உட்படுத்திட வேண்டும் என்று கோரியுள்ள 2 ஆவணங்களிலும் 1ம் எதிர்மனுதாரர் மனைவி கைரேகை வைத்துள்ளதாக பிரதிவாதிகள் கட்சி செய்வதில் அவர்களது கட்சிப்படியே 1ம் எதிர்மனுதாரர் மனைவியின் கைரேகை என்று அனுமானித்து கொண்டாலும் கூட சாட்சியாகவே கைரேகை உள்ளது என்றும், மேற்படி ஆவணங்களில் தரப்பினராக 1ம் எதிர்மனுதாரர் மனைவி கைரேகை வைத்ததாக கிடையாது என்றும், எனவே, ஒரு ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டதாலேயே அவருக்கு அந்த ஆவணத்தின் சரத்துக்கள் அனைத்தும் தெரியும் என்றோ அந்த ஆவணம் அவரை சட்டப்படி கட்டுப்படுத்தும் என்றோ ஏற்க சட்டத்தில் இடமில்லை என்றும், ( Attestor need not fully known about the deed, and the same cannot bind the attestor) அவ்வாறான நிலையில், மேற்படி ஆவணங்களை கைரேகை நிபுணரின் ஆய்விற்கு அனுப்பிட வேண்டிய அவசியமில்லை என்றும், அவ்வாறு அனுப்புவதால் வழக்கின் தீர்ப்பினை காலதாழ்த்திடவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதார் மற்ற பிரதிவாதிகளுடன் COLLUSIVE செய்து கொண்டு வயதான 1ம் எதிர்மனுதாரரையும் வாய்பேசமுடியாத உடல்நிலை சரியில்லாத இந்த வழக்கு வாதியான 1ம் எதிர்மனுதாராது மனைவியையும் அலைக்கழிவு செய்திட வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடனேயே இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனுவினை 1ம் எதிர்மனுதார் செலவுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள்/1,3,5, 6, 9 பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

**5.** இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:

**கேள்வி:**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**7)** இம்மனு தாக்கல் செய்யப்பட்டதன் பொருண்மை பிண்ணணி குறித்து காணும் போது அசல் வழக்கானது இந்த நிர் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் இம்மனுதாரர்கள்/1, 3, 5, 6, 9 பிரதிவாதிகள் மற்றும் 2 முதல் 5 எதிர்மனுதார்கள்/2, 4, 7, 8 பிரதிவாதிகள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல செய்து வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு வாதி தரப்பில் வா.சா.1, 2 என இரு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா. 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனுதார்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தின் முன்னர் வாதி முன்னிலையாக உத்தரவிட வேண்டியும், அவரிடம் கைரேகை பெற்று, அவர் கைரேகையுடன் பி.வா.சா.ஆ. 1, 2 ல் கண்ட வாதியின் கைரேகையுடன் ஒப்பீடு செய்ய தடவியல் நிபுணரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெறவேண்டி இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 10(ஏ) கீழ் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** மனுதாரர்கள் தரப்பில், வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதியின் கணவரும் அவர் வழக்கு முகவரான முத்து தனது சாட்சியத்தில் பி.வா.ஆ.1 12.06.2000 தேதியிட்ட கிரைய பத்திரம், பி.வா.ஆ.2 26.07.2000 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஆகியவற்றில் வாதி சரோஜா அவர் தாயார் பொன்னுததாய் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சாட்சியாக கைரேகை மற்றும் கையொப்பம் செய்துள்ளதாகவும், ஆனால் தற்போது மேற்படி பி.வா.சா.ஆ.1 , 2 ஆவணங்களில் சாட்சிகள் கைரேகை செய்துள்ளதில் உள்ள கைரேகை தனது மனைவி சரோஜா (வாதி) உடையதல்ல என அவர் கணவரான வா.சா.1 முத்து தனது சாட்சியத்தில் மறுத்துள்ளதால் மேற்படி பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் சாட்சிகள் விபரங்களில் உள்ள கைரேகையை வாதி சரோஜாவின் கைரேகை என்பதை நிரூபிக்கும் பொருட்டு நீதிமன்றத்தின் முன்னர் வாதியின் கைரேகையை பெற்று அதனுடன் பி.வா.சா.ஆ. 1, 2 ல் கண்ட கைரேகையினை தடவியல் நிபுணரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற வேண்டும் என கூறியுள்ளார்.

**9)** இம்மனுவில் இருதரப்பு வாதுரைகள் காணும்போது தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றோர் பொன்னுச்சாமி சேர்வை மற்றும் பொன்னுத்தாய் தம்பதியினரின் சொத்துக்கள் என்றும். அவர்கள் இறப்பிற்கு பிறகு நாளது தேதி வரை பாகப்பிரிக்கப்படாமல் பொதுவில் வைத்து அனுபவித்து வரும் சொத்து என வாதியும், மேற்படி பொன்னுச்சாமி சேர்வை தம்பதியினருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1999ம் வருடம் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைப்படி சில சொத்துக்கள் வாதிக்கும், 1 , 2 பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டும், தாவா சொத்துக்கள 3, 4 பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு அதன் பின்னர் அவர்கள் இடையிலான 26.07.2000 தேதி பாகப்பிரிவினை ஏற்பட்டு 3, 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் சொத்துகள் என 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வழக்காடப்பட்டுள்ளது.

**10)** மனுதாரர்கள் தரப்பில் 3, 4 பிரதிவாதிகளுக்கிடையிலான பி.வா.சா.ஆ.1 26.07.2000ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்திலும், 2ம பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பி.வா.சா.ஆ.2 12.06.2000 தேதிய கிரைய பத்திரத்திலும் வாதி சரோஜா கைரேகை செய்துள்ளார் என்றும். இதன் மூலம் தாவா சொத்துக்கள் 3, 4 பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதை வாதி ஒப்புக்கொண்டதாகவும் ஆனால் தற்போது அவர் கணவர் வா.சா. 1 முத்து தனது சாட்சியத்தில் பி.வா.சா.ஆ.1,2 உள்ள வாதி கைரேகையை மறுத்துள்ளதால் மேற்படி ஆவணங்களில் உள்ள வாதியின் கைரேகையை நிரூபிக்கவே இம்மனு மூலம் நீதிமன்றத்திற்கு முன்னர் வாதி கைரேகை பெற்று பி.வா.சா.ஆ.1,2 ஆவணங்களுடன் ஒப்பீடு செய்ய வேண்டும் என் கூறியுள்ளார்.

**11)** முதலாவதாக பி.வா.சா.ஆ1, 2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும், ஆகையால் பி.வா.சா.ஆ.1, 2 பதிவுத்துறை சட்டத்தின் வகைமுறைகளை பின்பற்றி பதிவு செய்துள்ளதாக கருதப்படும் அவ்வாறான நிலையில் பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் உள்ள சாட்சியாக வாதி கைரேகை வைத்துள்ளதை அவர் கணவரான வா.சா.1 முத்து மறுக்கும் நிலையில் அதனை மெய்பிக்க வேண்டிய சுமை வாதியை சார்ந்ததாகும் தவிர மனுதாரருக்கு சார்ந்தது அல்ல. மேலும் பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் வாதி சாட்சியாக கைரேகை செய்துள்ளாரே தவிர மேற்படி ஆவண நிறைவேற்று நபர் அல்ல, ஆகையால் பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் வாதி

கைரேகை செய்துள்ளதை வைத்து பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தில் கண்ட சரத்துகளை ஏற்றுக்கொண்ட நபராக கருத முடியாது. பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தின் தரப்பினர்கள் அதில் கையெழுத்திட்டதற்கு சாட்சி மட்டும் ஆவார்.

**12)** மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறும் காரணங்களுக்காக நீதிமன்றத்தின் முன்னர் வாதி முன்னிலையாகி உத்தரவிட்டு அவர் கைரேகை பெற்று பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்துடன் ஒப்பீடு பார்க்க வேண்டி அவசியமோ, சூழலோ இல்லை என தீர்மானித்து இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் புதன் 13ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்கள்/1, 3, 5, 6, 9 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**